உ

திருத்தணிகைத் திருவிருத்தம்

(குறிப்புரையுடன்)

ACL-FTS
00383

பதிப்பாசிரியர்:

S. கலியாணசுந்தரையர்

உ

கணபதி துணை

தொட்டிக்கலை

ஸ்ரீ சுப்பிரமணிய முனிவர்

இயற்றிய

திருத்தணிகைத் திருவிருத்தம்

இது

குறிப்புரையுடன்

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்

குமாரர்

S. கலியாணசுந்தரையரால்

சென்னை, கபீர் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது

விய ௵ சித்திரை ௴

(உரிமைப்பதிவு)

முகவுரை

இந்நூலின் மூலம்மட்டும் 1914-ஆம் வருஷத்தில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் என் தந்தையாராகிய மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்களால் செந்தமிழ்ப் பிரசுரம் 26 ஆக வெளி வந்தது.

பிணியுற்ருேர் இந்நூலின் பாராயணத்தால் பிணி நீங்கப் பெறுவார்களென்று தெரிந்தமையாலும் உரையுடனிருந்தால் அநேகருக்கு உபயோகமாயிருக்கும் என்ற எண்ணத்தாலும் இலவச வெளியீடாக இப்போது இதனை வெளியிடலானேன்.

இதன் ஆசிரியரான தொட்டிக்கலை ஸ்ரீ சுப்பிரமணிய முனிவர் திருவாவடுதுறை ஆதீனத்தில் புகழ்பெற்று விளங்கிய ஸ்ரீ சிவஞான முனிவருடைய நன்மாணுக்கர் பன்னிருவருள் ஒருவர்; திருவாவடுதுறை யாதீனத்தில் பதின்மூன்றும் பட்டத்திலிருந்த ஸ்ரீ அம்பலவாண தேசிகரிடம் சைவசந்நியாசமும் சிவதீக்ஷையும் ஞானுேபதேசமும் பெற்றவர். விரைவாகச் செய்யுள் செய்யும் வன்மையும் சங்கீதப் பயிற்சியும் இவர்பால் நன்கு அமைந்திருந்தன. 'மதுரகவி' என்று இவர் ஆதீனத்தில் சிறப்புப் பெயர் பெற்று விளங்கினுர். சென்னைக்கு அருகிலுள்ள தொட்டிக்கலையில் பெரும்பாலும் இருந்துவந்தமையால் தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் என இவர் பெயர் வழங்கும். இவர் திருவாவடுதுறைக்கோவை முதலிய இருபத்தைந்து பிரபந்தங்கள் இயற்றியுள்ளார். இவரது விரிவான வரலாறுகளை என் தந்தையாரவர்கள் வெளியிட்டுள்ள திருவாவடுதுறைக்கோவையிற் காணலாம்.

இதனைக் குறிப்புரையுடன் தனியே பதிப்பிக்க அனுமதியளித்த மதுரைத் தமிழ்ச் சங்கத்துத் தலைவரவர்கள்பால் மிக்க நன்றி பாராட்டுகின்றேன்.

தியாகராஜ விலாசம்
திருவேட்டீசுவரன் பேட்டை
30—4—46.

இங்ஙனம்
S. கலியாணசுந்தரையர்

உ

திருச்சிற்றம்பலம்.

திருத்தணிகைத் திருவிருத்தம்

ஓங்கார வுருவசின் மயவிமல வொளியாகி
யுலகமுழு வதுநிறைந்த
உண்மைப் பராபர நிராமய நிராலம்ப
உம்பர்கள் சிகாரத்னமே
ஆங்கார நீங்காத தீங்காண வத்தின்வரும்
அலகிலாப் பிறவிதோறும்
அடியேன்செய் கொடுவினை யளக்கருவ ரம்பினை
யளந்திடினு மளவுபடுமோ
வாங்காம லவ்வினை வருத்தலா லுன்றிருமுன்
வந்தபய மபயமென்றேன்
மயிலேறி வந்துதிரு மந்திர சடாக்கர
மருந்தரு டிருந்துமடியார்
தாங்காண முன்னின்ற சண்முகத் தெய்வமே
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே.

குறிப்புரை

1. ஓங்கார உருவ - பிரணவத்தை வடிவமாக உடையவனே; "ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு" (**கந்தரலங்காரம்**, 55.) சின்மய - ஞானமயமானவனே. பராபர - உயர்ந்த பொருளும் தாழ்ந்த பொருளுமாக உள்ளாய். நிராமய - நோயற்றவனே. நிராலம்ப - தனக்கு ஒரு பற்றுக்கோடு வேண்டாதவனே. ஆணவத்தின் - ஆணவ மலத்தினால். அலகு - கணக்கு. வாங்காமல் - என்னைவிட்டு நீங்காமல். சடாக்கர மருந்து அருள் - ஆறெழுத்தாகிய மருந்தை அருள்வாயாக. (1)

பன்னரிய வுன்னற்பு தத்திருப் புகழைப்
பகர்ந்துகொண் டுன்றிருமலைப்
படியேறு மன்பர்வினை பொடியாகு மென்றுநிறை
மொழிமாந்தர் பகருவதுகேட்
டென்னுடைய பொல்லாத சஞ்சிதப் பிணியொழித்
தெனையும்வாழ் வித்தருளுகென்
றிரவுபக லுன்னருட் சந்நிதியில் வந்துமுறை
யிடுவேற்கி ரங்கியருள்வாய்

பொன்னிறக் காந்தளொடு செங்குவளை மலர்களும்
பொற்பமர் கடப்பமலரும்
பூத்தலர் குறிஞ்சியுஞ் சேத்தகூ தளமும்
புனைந்ததிரு மார்பழகனே
தன்னமு மனத்துய ரிலாதமர ரைக்காத்த
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே.

பன்னரிய - சொல்ல இயலாத. நிறைமொழி மாந்தர் - அருளிக் கூறினும், வெகுண்டு கூறினும் அவ்வப்பயனைப் பயந்தேவிடும் சொற்களையுடைய துறந்தோர்; குறள், 28. பரிமேல். சஞ்சிதப் பிணி - சஞ்சித வினையாகிய நோயை. பொற்பு - பொலிவு. சேத்த - சிவந்த. தன்னமும் - சிறிதும். அமரரை - தேவரை. (2)

திருவருள் கொழிக்குமுன் சரவணப் பொய்கைத்
திருத்தந் திளைத்தாடியே
தீராத பழவினை யழுக்கைக் கழீஇவரும்
திருவாள ரைத்தரிசியா
உரிமையுட னடியேனு மச்சர வணப்பொய்கை
யுற்றுவந் தாடியுட்கொண்
டுன்னடிக ளேசரண மென்றேல மிடுமெனக்
குறுகுறை தவிர்த்தருளுவாய்
மருவளரு மலரோன் றருக்கினைக் கண்டுகர
மலர்கொண்டு தாக்கியவனை
வன்சிறை யிருத்தியுல கேழும் படைத்தநின்
வல்லாண்மை சொல்லவசமோ
தருவளரு மமரா வதிக்கரசை வாழ்வித்த
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே.

திருத்தம் - தீர்த்தம். திளைத்து ஆடி - இடைவிடாமல் ஆடி. கழீஇ - கழுவி. தரிசியா - தரிசித்து. சரணம் - புகலிடம். உறு குறை - உற்ற குறையை. மரு - மணம். மலரோன் - பிரம தேவனது. தருக்கு - செருக்கு. கரமலர்கொண்டு தாக்கி - கையினால் (தலையில்) குட்டி. தரு - கற்பக மரம். அரசு - இந்திரன். (3)

கண்டவர் களிக்குமுரு கேசவுன் பெருமையைக்
கடவுட் சுனைக்குள் வளர்செங்
கல்லார முப்போது மலர்ந்து கமழ்தரும்
கந்தமே தூதாயுலாய்
எண்டிசையு ளார்க்குந் தெரித்தலாற் கொண்டாடி
யெல்லாரும் வந்துதொழுதுன்

இன்னருளை மொண்டுண்ண விந்நோயின் யாரொருவன்
இடருற் றிளைப்பதழகோ
அண்டர்க ணடுக்கமுற வாயிரத் தெட்டண்டம்
ஆண்டிடு குரூரசூரன்
ஆண்மைதனை நீருக்கி யவனையிரு கூறுக்கி
யாட்கொண்ட சயசிங்கமே
தண்டையொடு கிண்கிணிகள் கொஞ்சுசெஞ் சரணனே
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே.

கடவுட் சுனை - தெய்வத்தன்மையுள்ள சுனை. கல்லாரம் - கருங்குவளைமலர்; இது திருத்தணிகை மலையிலுள்ள திருச்சுனையில் காலை, உச்சி, மாலை ஆகிய மூன்று காலங்களிலும் மலர்ந்து வந்தமை, "காலைப் போதினி லொருமலர் கதிர்முதி ருச்சி, வேலைப் போதினி லொருமலர் விண்ணெலா மிருள்சூழ், மாலைப் போதினி லொருமல ராகவிவ் வரைமேல், நீலப் போதுமூன் றொழிவின்றி நிற்றலு மலரும்" (**கந்தபுராணம்**, வள்ளியம்மை திருமணப் படலம், 222) என்னும் திருவிருத்தத்தால் விளங்கும். கந்தம் - வாசனை. தெரித்தலால் - சொல்லுதலாலே. இடர் உற்று - துன்பத்தை அடைந்து. அண்டர்கள் - தேவர்கள். ஆயிரத்தெட்டு அண்டங்களை ஆண்ட சூரன்: "ஆயிரத் தெட்டெனு மண்டம் யாவையும், சேயுய ரிந்திர ஞாலத் தேர்மிசை, ஏயெனு மளவையி லேகி வைகலும், நாயக முறையினை நடாத்தி நண்ணினன்" (**கந்த புராணம்**, இந்திரன் கரந்துறை படலம், 2.) நீருக்கி - சாம்பலாக்கி; அழித்து என்றபடி. தண்டை, கிண்கிணி: காலணிகள். (4)

அத்தான வச்சிங்கன் வெருவச் சிரங்களை
யரிந்தவச் சிரமிருக்க
அக்கிரம மிக்ககிர வுஞ்சமலை பொடியாக்கும்
அயில்வேல் வலத்திருக்கச்
சித்தான வுன்னுடைய வாறக் கரங்களாம்
தெய்வமந் திரமிருக்கத்
தீண்டினும் பூசினும் பாபப் பசாசறத்
தீர்க்கும்வெண் ணீறிருக்க
இத்தார ணிக்குளொன் றறியாக் குழந்தைபோ
லென்னளவு நீயிருந்தால்
என்குல கத்தைத் துரத்தியெனை யுய்விக்க
வின்னமொரு தெய்வமுண்டோ
சத்தாகி முத்திக்கு வித்தாகி நின்றசிவ
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே.

தானவச் சிங்கன் - சிங்க முகாசுரன். அரிந்த - அறுத்த. அயில் வேல் - கூரிய வேல். சித்து - ஞானம். பாபப் பசாசு - பாவ மாகிய பசாசு. ஆகுலத்தை - மனக் கலக்கத்தை. சத்து - என்று முள்ள பொருள். (5)

வெங்கன லுறைப்பவரு பானுகோ பப்பதகன்
விட்டமா யைப்பகழிதான்
மிக்கமயல் பூட்டிக் கருங்கடற் கொண்டுபோய்
வீழ்த்திட வழுந்திநின்ற
துங்கவொளி மணிமகுட பாரநவ வீரரொடு
சோர்வரிய பூதர்களையுஞ்
சுடர்விடுங் குடுமியுடை யடலுடம் பிடிகொண்டு
தூக்கிய பராக்கிரமனே
பங்கமுறு கொடுவினைக் கடலிலே நெடுநாட்
படிந்துதடு மாறுமெனையும்
பயப்படே லென்றுநின் பன்னிரு விழிக்கருணை
பாலித் தெடுத்தருளுவாய்
சங்கடம் விலக்குமொரு தந்திமுக வற்கிளைய
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே.

உறைப்ப - மிக: பானுவுக்கு அடை. பதகன் - பாதகன். பகழி - அம்பு. நவ வீரர் - வீரபாகுதேவர் முதலிய ஒன்பதின்மர். குடுமி - நுனி. உடம்பிடி - வேலாயுதம். பங்கம் - குற்றம். சங்கடம்- இடையூற்றை. தந்திமுகவன் - விநாயகர். (6)

எண்ணிலுயிர் கட்கெலா மன்றுதொட் டகலாமல்
என்றுமொரு தஞ்சமாயே
இருத்தலாற் கந்தனென வொருநாம முற்றனை
இருண்டமல மோகத்தினுற்
கண்ணிலா ருக்குமெய்க் கோல்கொடுத் தீர்ப்பதுன்
கருணைப் பெருக்கமன்றோ
காங்கேய வுனையன்றி மற்றொருதெய் வத்தைநான்
கனவிலு நினைத்தல்செய்யேன்
மண்ணிலடி யாரிரு வினைக்காடு வேரோடு
மடியவடி வேல்பிடித்து
மாறுத பேரின்ப வாழ்வைக் கொடுத்தருள
வாய்மையாங் கொடிகட்டியே
தண்ணருளின் வரமாரி பொழிகின்ற தெய்வமே
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே.

அன்று தொட்டு - அநாதி காலம் தொடங்கி. கண் - ஞானக்கண் மெய்க்கோல் - உண்மைஞானமாகிய கோலே. காங்கேய - கங்கையின் குமாரனே. வடிவேல் - கூரிய வேலே. மாருத - நீங்காத. வரமாரி - வரமாகிய மழையை. (7)

அத்தகு சிறப்புடைய க்ருத்திகைத் தையலார்
அறுவர்முலை யமுதவாரி
அருமறை பழுத்தொழுகும் வாயார மொண்டுகொண்
டானந்த மழைபொழிதரும்
வித்தகக் கருணைமா முகிலென்று நம்பியென்
விடாய்தீர வந்தடுத்தேன்
வேறுபுக லில்லையு னடைக்கல மடைக்கலம்
வெட்சிசூ டியவிசாகா
சித்திரக் கலபமர கதநிற மயூரனே
தேவகுஞ் சரிமணாளா
சிங்கார வள்ளியிரு சிற்றடிகள் வருடிச்
சிவந்தபன் னிருகரதலா
சத்துருக் கசமுகத் தசுரசங் காரனே
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே.

அத்தகு : அ, உலகறிசுட்டு. தையலார் - மகளிர்; "சரவணப் பூந்தொட்டி லேறி யறுவர் கொங்கை, விரும்பி" (**கந்தரலங்காரம்**, 5.) வித்தகம் - திறமை. முகில் - மேகம். நம்பி - விரும்பி. விடாய் - நோய். புகல் - அடைக்கலம் புகுதற்குரிய இடம். கலீபம் = கலாபம் - தோகை. மரகத நிறம் - பச்சை நிறம். தேவகுஞ்சரி - தெய்வயானையம்மையார். வருடி - பிடித்து. கசமுகத்து அசுரன் - தாரகாசுரன். (8)

வாலைதிரி புரையான சிவகாம சுந்தரிதன்
மைந்தனே நின்றுவசமா
மதுகையுறு காலாயு தத்தினுக் கேனுநீ
வாகனங் கொடுநடாத்தும்
வேலைநடு வடவையழல் விழிபொழிய வருமொரு
வியன்றகர் தனக்காயினும்
விடைகொடுத் தென்னுடைய பேரா வினைக்குன்றை
வேரோ டடித்தருளுவாய்
கோலமலி தென்பரங் குன்றாவி னன்குடி
குளிர்ந்தசெந் தூரேரகம்
கொடியாடு சோலைமலை குன்றுதோ றாடலும்
கொண்டருளி நின்றகுகனே

தாலமுழு துண்டபைங் கொண்டன்மே னியன்மருக
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே.

துவசம் - கொடி. மதுகை - வன்மை. காலாயுதம் - கோழி. வேலை - கடல். வடவை - வடவா முகாக்கினி. வியன்தகர் - பெரிய ஆட்டுக்கிடாய்; "தகரன் மஞ்ஞையன்" (முருகு. 210); "அன்று தொட் டமல மூர்த்தி, உவகையா லனைய மேட மூர்ந்தன னூர்தி யாக" (**கந்தபுராணம்**, தகரேறு படலம், 25.) குன்று - மலை; தென்பரங்குன்று முதலியன ஆறுபடை வீடுகள். தாலம் - உலகம். கொண்டல் - மேகம். மேனியன் - திருமால். (9)

நலமருவு மதுரைத் தமிழ்ச்சங்க மேற்புலவர்
நடுவீற் றிருந்தமுதல்வா
நக்கீரர் சொன்னமுரு காற்றுப் படைத்தமிழும்
நல்லருண கிரிநாதர்சொற்
புலமையுறு சித்திரச் சந்தப்ரவாகமும்
புனிதச் செவிக்குளார்த்த
புகழாள குறுமுனிக் காரணத் துட்பொருள்
புலப்படுத் தியகுரவனே
கொலைகளவு முதலான பாதக மெனக்குவெகு
கோடிக ளிருந்திடினுமுன்
கூர்மந் திரப்படையி னுல்வீட்டி யெனதுளம்
குடிகொண் டிருந்தருளுவாய்
சலனமறு சருவபரி பூரண தயாநிதே
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே.

நடுவீற்றிருந்தது உருத்திர சன்மனுகி. சந்தப்ரவாகம் - திருப்புகழாகிய சந்தவெள்ளம். ஆர்த்த - நிறைத்த. குறுமுனி - அகத்திய முனிவர். ஆரணம் - வேதம். குரவன் - ஆசாரியன். வீட்டி - அழித்து. சலனம் - அசைவு. தயாநிதே - தயையாகிய நிதியையுடையாய். (10)

முற்றிற்று.

Printed at KABEER PRINTING WORKS, Triplicane, Madras
and Published by S. Kalyanasundara Iyer
Paper Issue Card No. Ms. 376